[திரு. இராம. இராமநாதன்] [*1994 நவம்பர் 8*

நடாத்தி, சமூக நீதி காத்திட்ட வீராங்கனையாகத் திகழ்ந்து, மக்கள் நலம் பேணி, எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி, *1994-95* ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக கீழ்க்காணும் அறிக்கையினை பேரவைக்கு அளிக்கின்றேன்.

"பொது நிறுவனங்கள் அலுவலர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்கள் குறித்து குழு அளித்திட்ட 41-ஆவது அறிக்கை. 1989–90இல் கண்டுள்ள பரிந்துரையின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பற்றிய 222–வது அறிக்கை."

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தனியிருப்பிடச் சொத்துரிமைச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவுகள், அறிமுகம் செய்தல். *1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியிருப்பிடச் சொத்துரிமைச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியிருப்பிடச் சொத்துரிமைச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

1994 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. சே ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) கருங்காலிவகை மரங்கள் (பாதுகாப்புச்) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கருங்காலிவகை மரங்கள் (பாதுகாப்புச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கருங்காலிவகை மரங்கள் (பாதுகாப்புச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-35

(இ) ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.